சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்

MCOP. No.49/2021

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 13–ஆம் நாள் எ.சா.1 சாட்சி திருமதி.நிவாசினி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.நிவாசினி | தொழில் | : இளநிலை உதவியாளர் |
| த/பெ | : | கிராமம் | : மேட்டுப்பாளையம், RTO |
| வயது | : | தாலுக்கா | : மேட்டுப்பாளையம் |

எ.சா.1 : முதல் விசாரணை:

நான் இவ்வழக்கில் சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். எனக்கு மோட்டார் வாகன ஆய்வாளர் எனக்கு சாட்சியமளிக்க கொடுக்கப்பட்ட அனுமதிக்கடிதம் கொடுக்கப்பட்டது. அது **எ.ம.சா.ஆ.1**ஆக குறியீடு செய்யப்படுகிறது. TN 02 P 2585 என்ற பதிவு எண் கொண்ட மாருதி வேகனார் காருக்கு 09.12.2002லிருந்து 08.12.2017வரை தகுதிச்சான்று உள்ளது. விபத்து தேதியான 30.10.2019ல் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை. இது குறித்த கடிதம் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனம் 24.04.2025ம் தேதியில் தகுதிச்சான்று புதுப்பிக்கப்பட்டது. அதற்கான தணிக்கை அறிக்கை மற்றும் தகுதிச்சான்றை தாக்கல் செய்கிறேன். மேற்படி தகுதிச்சான்று **எ.ம.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

மேற்படி தணிக்கை அறிக்கை **எ.ம.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி வாகனத்தை எங்கள் மோட்டார் வாகன ஆய்வாளர் தான் தணிக்கை செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.4 ஆன மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று 09.12.2002லிருந்து 08.12.2017வரை உள்ளது. விபத்து தேதியான 30.10.2019ல் மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று இல்லை.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

TN 02 P 2585 என்ற பதிவு எண் கொண்ட மாருதி வேகனார் காரானது ஆலாங்குளம் யூனிட் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி வாகனம் ஊட்டி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச்சான்று புதுப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.